[30th January 1961

SRI P. G. MANICKAM : சென்னையிலிருந்து கோயம்பத்தூருக்கு எக்ஸ்பிரஸ் பஸ்கள் விடவேண்டுமென்று அரசாங்கத்திற்கு ஏதாவது மனுக்கள் அனுப்பப்பட்டனவா? அப்படி அனுப்பப்பட்டிருப்பின் அவை மீது எடுக்கப்பட்டிருக்கும் நடவடிக்கைகள் யாவை?

THE HON. SRI V. RAMAIAH : தனி கேள்வி வேண்டும்.

SRI K. VINAYAKAM : Will the Government be pleased to introduce Express Buses from Madras to Tirupathi which will enable the passengers to have Darshan at the Hills and return to Madras City the same night?

THE HON. SRI V. RAMAIAH : கனம் அங்கத்தினர் அவர்கள் ஆலோசனையை அரசாங்கத்திற்கு எழுதி அனுப்பி வைத்தால் அது பரிசீலனை செய்யப்படும்.

SRI V. K. KOTHANDARAMAN : அயல் நாட்டு செலாவணி தரக்கூடிய டானரிகள் அதிகப்படியாகயிருக்கும் பேரணும்பட்டிற்கு ரெயில் வசதி ரொம்ப ரொம்ப மோசம். ஆகவேதான் பேரணும்பட்டான் இரண்டான்கெட்டான் என்ற நிலை இருப்பதால், பேரணும்பட்டு—மதருஸ் எக்ஸ்பிரஸ் பஸ் போடவேண்டுமென்று பல மகஜர்கள் அனுப்பப்பட்டிருக்கின்றன. அவை இதுவரை கவனிக்கப்படவில்லை. அது துரிதமாக கவனிக்கப்படுமா?

THE HON. SRI V. RAMAIAH : ஆரம்பத்தில் சொன்னது போல் எங்கெங்கு அவசியமோ அதை டிரான்ஸ்போர்ட் அத்தாரிட்டி பார்த்து பரிசீலனை செய்து நடவடிக்கைகள் எடுத்துக் கொண்டிருக்கிறார்கள். அங்கத்தினர் அவர்களின் கோரிக்கையை அரசாங்கத்திற்கு அல்லது டிரான்ஸ்போர்ட் கமிஷனருக்கு எழுதி அனுப்பி வைத்தால் அதையும் பரிசீலனை செய்வார்கள்.

Holiday Home

* 244 *Q.*—SRI N. K. PALANISAMI : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) whether there is any proposal to provide 'Holiday Home' for industrial workers; and

(*b*) if so, the amount allotted for the same?

THE HON. SRI R. VENKATARAMAN : (*a*) Yes, Sir. The Government have approved a Scheme for construction of a Holiday Home for Industrial Workers at Mahabalipuram.

(*b*) The Government have sanctioned in the first instance an expenditure not exceeding Rs. 64,300 during the current year (1960–61) towards the non-recurring cost involved in the scheme.

30th January 1961]

SRI N. K. PALANISAMI : எந்தெந்த தொழில்களைச் சேர்ந்த தொழிலாளர்கள் அதில் சேர்க்கப்படுவார்கள்? அல்லது எல்லாத் தொழிலாளர்களுக்கும் அதில் இடம் தரப்படுமா? இல்லையானால் குறிப்பிட்ட தொழில் செய்யும் தொழிலாளர்களுக்கு மட்டும் அதில் தங்க வசதியிருக்கிறதா?

THE HON. SRI R. VENKATARAMAN : பொதுவாக பாக்டரி ஒர்க்கர்ஸ்காக இது ஏற்படுத்தப்படவிருக்கிறது.

SRI J. MATHA GOWDER : தொழிலாளர்கள் விடுமுறை இல்லம் குன்னூரில் கட்ட மத்திய அரசாங்கம் சிபார்சு செய்திருக்கிறது என்று கேள்விப்பட்டேன். அது உண்மையா? அப்படியானால் குன்னூரில் கட்ட அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா?

THE HON. SRI R. VENKATARAMAN : மத்திய அரசாங்கம் சிபார்சு செய்யவில்லை. நம் அரசாங்கம்தான் அப்படி யோசனை செய்து கொண்டிருக்கிறது. அது இரண்டாவதாக எடுத்துக் கொள்ளப்படலாம்.

SRI N. K. PALANISAMI : இதில் தங்கும் தொழிலாளர்களிடமிருந்து ஏதாவது கட்டணம் வசூலிக்கப்படுமா? அல்லது ஆகக்கூடிய செலவை சர்க்காரே ஏற்றுக்கொள்ளுமா?

THE HON. SRI R. VENKATARAMAN : இவையெல்லாம் கட்டி முடிந்தவுடன் அல்லது முடியும் சமயத்தில் பரிசீலனை செய்யலாம்.

Stand-in buses

* 245 *Q.*—SRI T. S. RAMASWAMI (on behalf of SRI K. SATTANATHA KARAYALAR) : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) whether there is any proposal to have a fleet of ' Stand-in ' buses with standing accommodation to clear passengers during peak hours, and;

(*b*) if so, when it will be given effect to?

THE HON. SRI R. VENKATARAMAN : (*a*) No, Sir.

(*b*) Does not arise.

Tobacco

* 246 *Q.*—SRI S. M. ANNAMALAI (on behalf of SRI M. P. SARATHI) கனம் உள்விவகார அமைச்சர் அவர்கள் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) 1960-ல் புகையிலை பயிரிடும் முறை, பதனிடும் முறைகள் பற்றிய பயிற்சிக்காக யாழ்ப்பாணத்துக்கு எத்தனை அதிகாரிகள் அனுப்பப்பட்டனர்?

(இ) அவர்கள் எத்தனை நாட்கள் பயிற்சி பெற்றனர்?